**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI.**
**S.C.No.30/2020**
**Prosecution Witness P.W.10**

| | | | |
|---|---|---|---|
| Name | : மருத்துவர். திரு. மனோஜ் ஜான் பால் | Calling | : |
| Father's Name | : | Religion | : |
| Village | : | Age | : |
| Taluk | : | | : |

நாள் : 27.07.2026.

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

நான் தற்போது கோயம்புத்தூர் PSG மருத்துவமனையில் முதுநிலை மருத்துவ மாணவராக பயின்று வருகிறேன். இதற்கு முன்பு கடந்த 06.11.2016ம் தேதியில் நான் மேலூர் அரசு மருத்துவமனையில் உதவி மருத்துவராக பணிபுரிந்த போது அன்றையதினம் 10.40 மணியளவில் கீழவளவு காவல் ஆய்வாளர் அவர்களிடமிருந்து மேற்படி காவல்நிலைய குற்ற எண்.413/2016 சட்டப்பிரிவுகள் 294பி, 302 இதச வழக்கில் இறந்து போன நயினான் என்ற 52 வயதுள்ள ஆண்பிரேதத்தை முத்துப்பாண்டி, 1554 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டு, அன்று காலை 11.00 மணியளவில் மேற்படி நயினான் என்பவரது சடலத்தை சடலக்கூறாய்வு செய்தேன்.

கை, கால்களில் மரணவிறைப்புத்தன்மை பரவி இருந்தது. அந்த பிரேதமானது சாதாரண போசாக்குள்ள ஒரு ஆண்பிரேதம் மல்லாந்த நிலையில் கண்கள் மற்றும் வாய் திறந்தும் காணப்பட்டது.

வெளிப்புறக்காயங்கள்

1. கன்னத்தில் இடது உதட்டிற்கு கீழே 4 X 3 X 3 X செ.மீ அளவில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

2. இடது மார்பு காம்பிற்கு கீழே 3 செ.மீ.க்கு கீழே 7X 4 X 10 செ.மீ அளவில் ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

3. இடது பக்க கழுத்தின் அருகில் முன்பக்கத்தில் 2 செ.மீ.க்கு கீழே படுக்கவசமாக இடதுபுற தாடைக்கு கீழே 5 செ.மீ இடது காதுக்கு கீழே 11 X 1/2 செ.மீ. அளவில் ஒரு பரவலான மேலோட்டமாக ஒரு சிதைந்த காயம் காணப்பட்டது.

4. வலது தோள்பட்டையில் 2 X 1 செ.மீ அளவில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது

5. வலது பக்க கழுத்தில் 3 X 1 செ.மீ அளவில் ஒரு சிராய்ப்பு காயம் காணப்பட்டது

உள்உறுப்புகள்

கழுத்தெலும்பு, நாவடி எலும்பு ஆகியவை சாதாரணமாக இருந்தது. வயிற்றின் கீழ்பகுதியில் மார்பறையில் 4 மற்றும் 5 மார்பு எலும்புகள் இடதுபக்கத்தில் முறிந்தும், உதரவிதானத்தில் இதய அறைக்கு கீழே 4 X 4 செ.மீ அளவில் ஒரு சிதைந்த காயம் இருந்தது. இதயத்தின் மேல்பகுதியில் 5 X 3 X 3 செ.மீ அளவில் ஒரு கிழிந்த காயம் காணப்பட்டது. நெஞ்சுபகுதியில் 1 லிட்டர் அளவுள்ள இரத்தம் உறைந்து காணப்பட்டது. நுரையீரல்கள் வெளிறியும் வயிற்றுப்பகுதியில் சுமார் 100 மிலி அளவுள்ள வாயு பொருளும் குடல்கள், கல்லீரல், மண்ணீரல், சிறுநீரகங்கள் வெளுத்தும், மண்டைஓடு மற்றும் மூளைப்பகுதி சாதாரண நிலையிலும் இருந்தது.

உள்உறுப்புகள் இராசயன பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து பெறப்பட்டு அங்கிருந்து பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையில் இறந்தவர் இதய அடைப்பு அதிர்ச்சியினாலும் அவருக்கு ஏற்பட்ட கூர்மையான பொருளால் குத்தப்பட்டதாலும் அதன் விளைவாக இதயம்

சேதமடைந்து இருந்ததாலும், மரணம் ஏற்பட்டிருக்கும் என்றும், அந்த இறப்பானது பிரேதபரிசோதனைக்கு முன்பு 15 முதல் 17 மணி நேரத்திற்குள் ஏற்பட்டிருக்கக் கூடிய வாய்ப்பு உள்ளது. 06.11.2016ம் தேதி நான் வழங்கிய சடலக்கூறாய்வு அறிக்கை **அ.சா.ஆ.6** ஆகும். 30.11.2016ம் தேதி நான் வழங்கிய இறுதிக்கருத்துரை **அ.சா.ஆ.7** ஆகும். காயங்கள் வழக்கின் சரித்திரத்தில் சொல்லப்பட்டவாறு சொல்லியவாறு சொல்லிய நேரத்திலும், சொல்லிய முறையிலும் கத்தி போன்ற ஆயுதங்களால் ஏற்பட வாய்ப்பு உள்ளது. இதுசம்பந்தமாக காவல்துறையினர் என்னை விசாரித்தனர்.

**குறுக்குவிசாரணை**

நான் என்னுடைய கருத்துரையில் கூறியுள்ள Hypovolemic Shock என்பது உடலின் வெப்பநிலை அதிகரிக்கும் போது வர வாய்ப்பு உண்டா என்றால் இல்லை. என்னுடைய கருத்துரையில் சொல்லியுள்ள Rupture என்பது Myocardial Rupture என்றும் சொல்லலாம். வயது முதிர்ந்த நபர் மயக்கநிலையில் தடுமாறி கீழே விழும் போது கூர்மையான பகுதியில் உடல்படும் போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

ஒப்பம்/-*****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

SAISARAVANAN Digitally signed by SAISARAVANAN Date: 2026.07.28 10:16:56 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,

மதுரை.